தொடரும் போரினால் பொருளாதாரத்தில் வீழ்ச்சி!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 19 இதழ் 174
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3 08 1992

[கொழும்பு]

வடக்கு கிழக்கில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தொடர்ந்து யுத்தம் நடத்தும் வசதிகள் சிறிலங்கா அரசிடம் இல்லாதபோதும்

[4ம் பக்கம் பார்க்க]

13 கோடி ரூபா செலவில் 15,000 சிங்கள, முஸ்லிம் குடும்பம் மீள குடியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இராணுவப் பாதுகாப்புடன் சிங்கள-முஸ்லிம் குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன.

இவர்களுக்கு வங்கிக் கடன்

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு பகுதியில் தற்காலிக அமைதி

(மணிலா)

வட கிழக்கு பகுதியில் தற்போது, புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் சண்டை ஒய்ந்து காணப்படுவதாக இராணுவ பேச்சாளர் ஏ. எவ். பி. செய்தியாளருக்கு தெரிவித்துள்ளார்.

க. பொ த. உயர்தர

(4ம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப தீவிர முயற்சி

சுவிஸிலிருந்து 5,000 பேர் திரும்புவர்

(சூரிச்)

ஐரோப்பிய நாடுகளிலுள்ள பல லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப அந்நாடுகளால் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா தற்போது இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதால், ஈழ அகதிகள் தஞ்சமடைந்துள்ள ஏனைய நாடுகளும் அகதிகளைத் திருப்பி அனுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்ட நடவடிக்கையாகச் சுவிற்சர்லாந்து அரசு 5 ஆயிரம் ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சுவிற்சர்லாந்து அரசு 250 தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பவுள்ளது.

இலங்கையரும் தமிழ் அகதிகளை தத்தம் பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்படும் வரை

(4 ம் பக்கம் பார்க்க)

சர்வோதய அமைப்பிற்கு நிதி உதவிகள் நிறுத்தம்

(கொழும்பு)

சர்வோதயத்திற்கு வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் வழங்கி வந்த நிதி உதவிகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சிங்களக்குடியேற்றத்திற்கு வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் உதவி பயன்படுத்தப்பட்டுவருவதனாலே இவ்உதவிகள நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றதிற்கு சர்வோதயம் ஈடுபட்டு வருவதற்கு இத்தொண்டா நிறுவனங்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

யு. என். எச். சி. ஆருக்கும் இந்தியாவிற்கும் இடையில் தீர்க்கமான உடன்பாடு இல்லை

(கொழும்பு)

இந்தியாவுக்கும் யு. என். எச். சி. ஆருக்கும் இடையில் ஈழ அகதிகளைத் தாயகம் திருப்பி அனுப்புவது தொடர்பாகத் தீர்க்கமான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலும் இந்தியா அகதிகளை திருப்பி அனுப்புவதில் மிகத் தீவிரமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கை திரும்பும் அகதிகளின் பட்டியலை இந்தியா யு. என். எச். சி. ஆரிடம் கையளிக்கும். இந்தப் பட்டியலில் எத்தனை பேரின் பெயர்கள் இருக்கும் என்பதுஎவருக்

(4-ம் பக்கம் பார்க்க]

இன்று நல்லூர் கந்தன் உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

25 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தினமும் காலை 10-15 மணிக்கும், மாலை 4-00 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில் வீதி ஒழுங்குகளை தமிழீழக் காவல்துறையினர் மேறகொள்வர்.

சுகாதாரப் பகுதியினரின் முதலுதவிகள் அனைத்தும் 25 நாட்கள் வரை நடைபெறும்.

[4-ம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா கடற்படையால் 20 தமிழக மீனவர் கடத்தல்

[சென்னை]

தனுஷ்கோடிக்கும் கச்சதீவுக்குமிடையே நேற்றுமுன்தினம் 20 தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான ஐந்து இயந்திரப்படகுகளும் கடற்படையினரால் பறித்துச் செல்லப்பட்டதாக தப்பிவந்த மீனவர்கள் சிலர் தெரிவித்தனர். இலங்கை கடற்படையினர் மீனவர்களை அச்சுறுத்தி கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி மீனவர்களை விடுவிக்க உதவுமாறு இந்தியப்

(4-ம் பக்கம் பார்க்க)

5 படகுகளும் பறிமுதல்

குமண வருகிறது

[திருநெல்வேலி]

குமண கப்பல் இன்று திங்கட்கிழமை காலை பருத்தித்துறை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குமணகப்பலில் தபால் பொதிகள் மற்றும் அத்தியாவசியமான பொருட்கள் பலவும் எடுத்துவரப்படுகிறது. இதற்கான ஒழுங்குகளை அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது (157]

சினைப்பர் தாக்குதலுக்கு குடும்பப்பெண் பலி!

[யாழ்ப்பாணம்]

ஏழாலை வடக்குப் பகுதியில் விறகு பொறுக்கிக்கொண்டிருந்த பெண் ஒருவரை குறிபார்த்து கட்டுவன் காவலரணிலிருந்த படையினர் நேற்றுக் காலை 8 மணியளவில் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் அப்பெண் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

கட்டுவன் தெற்கிலிருந்து இடம்பெயர்ந்து ஏழாலை வடக்கில் வசித்து வந்தவரான திருமதி செல்வராசேஸ்வரி தங்கராசா (40 வயது] என்பவரே மரணமானவராவர்.

(56]

இந்தியாவிலிருந்து மீண்டும் இன்று முதல் அகதிகள் தாயகம் திரும்புகிறார்கள்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இன்று மீண்டும் ஈழஅகதிகள் விமானத்தில் தாயகம் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானத்தில் இந்த அகதிகள் இன்று திருமலைஅழைத்துவரப்படவுள்ளனர்.

இரண்டாவது கட்டத்தில் சுமார் 10,000 ஈழ அகதிகள்

(4ம் பக்கம் பார்க்க)

உலகத்தில் உயிர்கொல்லி பட்டினி உண்டாக காரணம் வறட்சி

வரி விளம்பரம்

பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILA Capsules. கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கல் ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சி-6552

ஈழத்து நூல்கள் - விற்பனை

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலங்களில் எமது நிறுவனத்தால் ஈழத்து நூல் கண்காட்சியும், விற்பனையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. வெளியீட்டாளர்கள், பதிப்பாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீகாந்த், புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவிலடி, நல்லூர். (எ-2334)

வாங்கலாம் விற்கலாம்

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகளும், றேடியோக்களும் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் டில்கா வாச் வேகஸ், 284, ஸ்ரான்லிவீதி (வானவில் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம். (சி-6600)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகாலை அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சனை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். [6589

நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான இந்திய இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை, இலக்கிய, சரித்திர நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

தவறிவிட்டது

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் 30-7-92 அன்று சிலாலையைச் சேர்ந்த ச. றோமிகஸ்ரா றோகினி என்பவருடைய பணப்பையுடன் அடையாள அட்டை 696050988 V யாழ். பல்கலைக் கழக அடையாள அட்டை 90/A/86 ஆகியவை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. M. K றோகினி, சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (சி-6623)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

மண்ணெண்ணை விநியோகம்

(புலோலி)

மருதங்கேணியிலுள்ள வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணை விநியோகம்செய்து வருகிறது.

சங்க பரப்புக்குள் வசிக்கும் அனைத்து நுகர்வோர்களுக்கும் பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றரும், விவசாயிகளுக்கு 15 லீற்றரும், க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஒரு லீற்றர் வீதம் வழங்கி வருகிறது. (91)

பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

கோவில்கள் பாதுகாக்கப்படவும், மக்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்படாமல் இருக்கவும் ஈழத்தமிழ்மக்கள் யுத்தத்தினால் படும் துன்பங்கள் நீங்கி அமைதி, சமாதானம், சுபிட்சம் ஏற்படவும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சகல ஆலயங்களிலும் சிறப்புப் பிரார்த்தனை நடைபெறவேண்டும் என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. (154)

பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக் கழகத்தின் 32-வது ஆண்டு நிறைவுவிழாவும் விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. ஆர் இராசநாதன் தலைமையில் நடைபெற்றன.

இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு எஸ். முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். திரு வின்சென்ற் டீ. போல், திருவாளர்கள் எஸ். துரைரத்தினம், பொ. இராசதுரை ஆகியோரும் உரையாற்றினர். (52)

வாரத்தில்

2 நாட்கள் பார்வையிட அனுமதி

(கொழும்பு)

தென்னிலங்கையிலுள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு அரசியல் கைதிகளை வாரத்தில் இரு நாட்கள் உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் அனுமதிவழங்கியுள்தாக கூறப்படுகிறது. (மா)

ஆங்கிலதின விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி ஆங்கில தின விழா புலோலி கொத்தணி அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இந்த ஆங்கிலதின விழாவிலே வடமராட்சி கல்விக் கோட்ட ஆங்கிலக்கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் (52)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலைய கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 5-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நிலையத் தலைவர் திரு. வேலவேந்தனார் தலைமையில் றக்கா வீதியிலுள்ள தல்லாலைப் பிள்ளையார் கோவிலின் அருகாமையில் நடைபெறும்.

கல்வி

மனிதனின் பூரண ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவது

(கொழும்புத்துறை)

கல்வி எனபது தேர்வில் சித்தியடைவதை மட்டும் நோக்கமாகக் கொண்டது அல்ல. அது மனிதனின் பூரண ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவது

மனிதனைச் சமய நம்பிக்கை உள்ளவனாகவும் பண்பாடு மிக்கவனாகவும் அறிவு நிறைந்தவனாகவும் ஆக்குவதே உண்மையான கல்வி ஆகும்.

இவ்வாறு யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு. அ. தங்கராசா கூறினார்.

அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் முன்னாள் அதிபர் கு. குருநாதபிள்ளை, வி. மு. மு அரியாலைப் பகுதி பொறுப்பாளர் திரு சீராளன் ஆகியோர் உரையாற்றினர். (154)

கரவெட்டி மருதடிக்குளம் சிரமதான புனரமைப்பு

(நெல்லியடி)

"போர்க்கால சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழ மக்களாகிய நாம் எமது இருகரங்களையும் கொண்டு செயல்படுவோமேயானால் முன்னேற்றகரமான செயல் திட்டங்களை அபிவிருத்தி செய்வதுடன் தமிழீழ மக்களின் எதிர்கால வாழ்க்கையும் சுபிட்சமடையும்"

இவ்வாறு கரவெட்டி கிழக்கு 'மருதடி குளம்' சிரமதான புனரமைப்பு வைபவத்தின் இறுதி நாளன்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்திய தமிழீழ ஆய்வு நிறுவன வடமராட்சிப் பிரிவுப்பொறுப்பாளர் திரு. பூங்குன்றன் தெரிவித்தார்

கரவெட்டி கிழக்கு கிராமிய உற்பத்திக்குழுத் தலைவர் திரு. திரு. ஏ. மக்கசன் தலைமையின் கீழ் பொருட் நிறுவன உதவியுடன் அப்பகுதி மக்கள் சுமார் அறுபது பேர் இந்த சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

இவ்வைபவத்தில் கரவெட்டிப் பிரதேச விசேட ஆணையாளர், திரு. செல்வ ஸ்ரீநிவாசன், கரவெட்டி வட்டவைப பொறுப்பாளர், திரு மணிவண்ணன், கரவெட்டி கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. தில்லையம்பலம் உட்பட பலர் உரையாற்றினர்கள். [160]

பொதுசன உதவிப் பணம்

(பருத்தித்துறை)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம்பெறுபவர்களுக்கான மே, யூன் மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம், கரவெட்டி பிரதம தபாலகத்திலும் ஏனைய உப தபால் நிலையங்களிலும் வழங்கப்பட்டுவருவதாகவும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தத்தமது தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறும் கரவெட்டி பிரதம தபாலதிபர் திரு எஸ். சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். [52)

இராசி பலன்

03-08-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆடி 19)

பஞ்சமி பி. ப. 2.19 வரை. அத்தம் பி. இ. 12 53 வரை, இராகுகாலம் காலை 7.33 முதல் 8. 04 வரை, சுபநேரம் பகல் 12 04 முதல் 1 34 வரை, கருடபஞ்சமி, சித்தயோகம், ஷஷ்டிவிரதம்.

மேடம்:- நல்லகீர்த்தி, தனப்பிராப்தி காரியசித்தி

இடபம்:- நேத்திரரோகம், மனஸ்தாபம், செலவு,

மிதுனம்:- பந்துவிரோதம், தாழ்ந்தநிலை, அலைச்சல

கடகம்:- மனத்தைரியம், பணவரவு, தொழில் சிறப்பு

சிங்கம்:- இஷ்டசித்தி, காரியதாமதம், ஆலயதரிசனம்.

கன்னி:- நண்பர்வரவு, மரியாதை, ஆனந்தம்.

துலாம்:- மனக்கவலை அகாலபோஜனம், சோபைக் குறைவு

விருச்சிகம்:- புத்திரர்சுகம், தொழில் சிறப்பு, புகழ்.

தனுசு:- மனசந்தோஷம், புதியநட்பு, குடும்பசுகம்

மகரம்:- வீண்பழி, மன உழைச்சல், கடமைதவறல்

கும்பம்:- ஞாபகக்குறைவு, சென்றவிடத்தில் விரோதம், ஏமாற்றம்,

மீனம்:- காரியஜயம், பெண்உதவி, நற்பணி

— ஜோஸ்யர்

மாணவர் சங்க கூட்டம்

(நல்லூர்)

மாணவர்களை கல்விசார் துறைகளில் ஊக்குவித்து வளமான எதிர்காலத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும் நோக்குடன் நல்லூர் முருகன் சனசமூக நிலைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் நிலையத் தலைவர் திரு. சொ. கதிரமலை தலைமையில் நடைபெற்றது. (158)

உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(காங்கேசன்துறை)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கு மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கான உதவிப் பணம் தற்போது வழங்கப்பட்டுவருகிறது.

கிராமசேவைஅலுவலர் காரியாலயங்களில் வைத்து வழங்கப்படும் இந்த உதவிப் பணத்தை தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு வலி-வடக்கு உதவி அரச அதிபர் திரு.கே. சந்திரராஜா கோரியுள்ளார். [86]

நல்லூர்

தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

மங்கள இசை:

கே. ஆர். சுந்தரமூர்த்தி, கே. செல்வரத்தினம் (நாதஸ்வரம்) கே. ஆர். புண்ணியமூர்த்தி, கே. நித்தியானந்தம், எஸ். ராமதாஸ், என். கணேசன் (தவில்)

இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்காதேவி ஆலயத்தில் ஜூன் 27 தொடக்கம் தினமும் நானூறு திருமுறைகள் வீதம் ஓதிக்கப்பட்டு இன்று 3ம் திகதி திங்கட்கிழமை பூர்த்தி விழாவும் திருமுறை ஊர்வலமும் நடைபெறும். (அ)

வருடாந்த மஹோற்சவம

(யாழ்ப்பாணம்)

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை 4 ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13-ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

வருடாந்த பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். தொல்பரம் அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் வி. க ஸ்ரீசரன் தலைமையில் நடைபெற்றது. 154]

தளபாட தட்டுப்பாட்டை நீக்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளிலும்மற்றும் சுகாதார திணைக்கள சிகிச்சை நிலையங்களிலும் நிலவும் தளபாடத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வைத்தியசாலைகளுக்கு அவசியமாகத் தேவைப்படும் மரஉருக்கு தளபாடங்கள் பற்றிய விபரங்களை தமது அலுவலகத்திற்கு எதிர்வரும் 14-ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கோரியுள்ளார். (72)

இசைமாலை

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

★ இசைமாலை நிகழ்ச்சி ★

நாளை 4-8-92 செவ்வாய்க்கிழமை

இடம்: மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு

காலம்: இரவு 8.30 மணி

நுழைவுச்சீட்டுக்கள்:

ரூபா 100. 00 இருவருக்குரியது

ரூபா 50. 00, 25. 00, தனி ஒருவருக்குரியது

ரூபா 10. 00 பாடசாலை மாணவர்களுக்குரியது

- செஞ்சோலை நிர்வாகத்தினர்

[எ 2338]

இந்தியாவே விடுதலைப்புலிகளை வளர்த்தது

பாகிஸ்தானுக்குத் தொடர்பில்லை!

குற்றச்சாட்டுக்கு பாக். மறுப்பு

[நியூயோர்க்]

பாகிஸ்தானியருக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையில இராணுவத் தொடர்புகள் இருப்பதாக இல்லாத கதைகளை இந்தியா பரப்பி வருவதாக பாகிஸ்தான் நேற்று குற்றஞ்சாட்டியது.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. எமக்கு புலிகளுடன் எவ்வித தொடர்பும் கிடையாது. இவ்வாறு ஐ.நா.வி லுள்ள பாகிஸ்தான் தூதுக் குழுவின் பேச்சாளரான மன்சூர் சுகாயில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு முன்பு பாதுகாப்பு அளித்து பயிற்சி அளித்து ஆயுதங்களும் வழங்கியவர்கள் இந்தியர்களே என்றும் பேச்சாளர் மன்சூர் சுகயில் மேலும் தெரிவித்தார்.

புலிகளுக்கு பாகிஸ்தான் ஆயுத விநியோகம்செய்வதாக இந்திய ஆங்கில சஞ்சிகையான 'பயணியர்' வெளியிட்ட செய்தியை இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதர் ஏற்கனவே மறுத்ததும் குறிப்பிடத்தக்கது. (மா-சி

சிறந்த நூல்களுக்கு பரிசளிக்க ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் சார்பில் 1991 ம் ஆண்டில் வெளிவந்த சிறந்த தரமான நூல்களுக்கு பரிசளித்து கௌரவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நூல் படைப்பாளிகள் தமது நூல்களின் இரு பிரதிகளை இம்மாதம் 30 ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குமுன் யாழ் நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் சமாசப்பணிமனையில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

விபத்து நிதி 10,000 ரூபா

[பண்டத்தரிப்பு]

பனையிலிருந்து தவறி விழுந்து மரணமான இளவாலை மேற்கைச் சேர்ந்த செபஸ்தி பத்திநாதர் (வயது 40) என்பவரின் குடும்பத்திற்கு பண்டத்தரிப்பு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் விபத்து நிதியாக 10 ஆயிரம் ரூபாவை அவரது மரணச்சடங்கின் போது வழங்கியுள்ளது. (72)

இரண்டு கட்ட உலர் உணவு

[பண்டத்தரிப்பு]

அண்மைய இராணுவ நடவடிக்கை அச்சம் காரணமாக இடம்பெயர்ந்த இளவாலை, மாரீசன்கூடல், சித்திரைமேழி, முள்ளான், மாதகல் ஆகிய இடங்களைச்சேர்ந்த மக்களுக்கு கடந்த வாரம் இரண்டு கட்ட இலவச உலர் உணவுப் பொருடகள் வழங்கப்பட்டுள்ளன. [72]

சிறுவர்

நல்லொழுக்க பராமரிப்புக் கிளை

[உடுவில்]

சிறுவர் நல்லொழுக்க பராமரிப்புத் திணைக்களத்தினரின் மல்லாகம் பிரிவு, மக்களின் நலன் கருதி இணுவில் மஞ்சத்தடி சனசமூக நிலையக் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. (109)

1 கிலோ தேயிலை 10,001 ரூபா!

[சென்னை]

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையில், ஒரு கிலோ தேயிலை ரூபா 10,001 க்கு விற்பனை செய்யப்பட்டது பிரீமியம் டார்ஜிலிங் தேயிலையை புட்டபங் டீ எஸ்டேட்டினர் இதனை விற்பனை செய்தனர். இது இன்று உலகசாதனையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (எஸ்)

வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் விநியோகம்

[பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிரந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு இவ்வருடம் மூன்றும் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் நேரடியாக வாகனம் மூலம் எடுத்துச் சென்று விநியோகித்து வருகின்றனர்.

இதன்பிரகாரம்தொல்புரம், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், சங்கானை, அளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள அரச வைத்தியசாலைக்கு இம்மாதம் 17-ந் திகதி மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [72]

விவசாயிகளுக்கு

நீரிறைக்கும் இயந்திரம்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு விவசாயத் தேவைகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறைத் தொகுதி அம்பன கமநல சேவை நிலையமும், உடுப்பிட்டித் தொகுதி புலோலி கமநல சேவைநிலையமும் மேற்கொண்டுள்ளன. இப்பகுதிகளில் நீர் இறைக்கும் இயந்திரம் தேவையான விவசாயிகள் தத்தமது பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது, (52)

சுகாதாரமற்ற

முறையில் பாண் விநியோகம்

(கொக்குவில்)

சுகாதார சீர்கேடான முறையில் பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி உரிமையாளர் மீதும் பாணை மூடாமல் திறந்த பெட்டிகளில் எடுத்துச் செல்லும் விற்பனையாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதுபற்றி பல புகார்கள் கிடைத்ததைத் தொடர்ந்து சுகாதார பகுதியினர் இதனை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாக தெரிவந்துள்ளது. (135)

முதலாமிடம்

[நெல்லியடி]

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக உடுப்பிட்டி கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் வெற்றிக் கேடயத்தை உடுப்பிட்டி கொத்தணி அதிபர் என். அனந்தராஜ் வழங்கினர். 160]

குளங்களை திருத்த முயற்சி

[நெல்லியடி]

துன்னாலை தெற்குப் பகுதியில் அமைந்துள்ள தெணிதூ குளம், கரண்டாதூ தெற்கு குளம், இலந்தைத் தாழ்வு குளம் ஆகியன கடந்த எட்டு வருடங்களாக திருத்தப்படாதிருக்கின்றது. இதனால் இப்பகுதி மக்களும் காலநடைகளும் பெரிதும் பாதிப்படைய வேண்டியுள்ளது.

இக்குளங்களை திருத்துவதற்கான முயற்சிகளை இப்பகுதி மக்கள் கவனத்திலெடுத்து போரூட் நிறுவனம் மூலம் தொடர்பு கொண்டுள்ளனர். (169)

உற்சவம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் வண்ணை கன்னுதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான கொடியேற்றம் நாளை 4ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ரதோற்சவம் 12ம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும். [158]

ஃ ஃ

(நெல்லியடி)

அல்வாய் வேலாலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழனன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12ம் திகதி ரதோற்சவம் காலை 9 மணிக்கும், தீர்த்தம் மறுநாள் காலை 6 மணிக்கும் நடைபெறவுள்ளது. (160)

பயிற்சி வகுப்பு

(நல்லூர்)

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் வாழைநார் அலங்கார பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வகுப்பு இம்மாதம் 6ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. [158]

ஒய்வூதியம் கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

பூநகரி பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மூன்று ஊழியர்களுக்கு ஒரு வருடமும் ஏழுமாதமாகியும் இதுவரை ஒய்வூதியம் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (154)

பாராட்டும் பிரிவுபசாரமும்

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி கண்டாவளை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுள்ள திரு. இ. ஐயாத்துரையை கௌரவிக்கும் முகமாக பாராட்டும் பிரிவுபசாரமும் எதிர்வரும் 8ம் திகதி சனியன்று கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர், யாழ். செயலக செயற்திட்டப்பணிப்பாளர், திரு. எஸ். பத்மநாதன், மாகாண சபைகள் நிர்வாக அலுவலர் திரு. வீரபத்திரபிள்ளை, ஆகியோருட்பட இன்னும் பலர் பாராட்டுரை வழங்குவார்கள். (160)

வேண்டுவ தருளாயோ சொல்லு முருகா! குமரா!!

ராகம்-கானடா தாளம்-ஆதி

பல்லவி

வேண்டுவ தறியாயோ நல்லை முருகா—இன்னும்
வேண்டுவ தருளாயோ சொல்லு குமரா—கந்தா!
.....(வேண்.....)

அனுபல்லவி

வானவர் துயர்தீர்த்தாய் வேலின்று ணையால்—அந்த
வானவர்க் கரசீந்தாய் வேலின்முனையால்—குமரா!
.....(வேண்.....)

சரணம்

துன்பங்கள் தொடர்வதுமேன் உன்தன்விருப்போ—நாளும்
இன்னல்கள் படர்வதுமேன் உன்தன்பொறுப்போ—சூழும்
பின்னங்கள் அடர்வதுமேன் உன்தன் கருத்தோ—மேலும்
வன்மங்கள் தொடர்வதுமேன் உன்தன்விருப்போ—முருகா!
.....(வேண்.....)

உன்மக்கள் துயர்கண்டும் இன்னும்சகிப்பேன்—தினம்
புன்மக்கள் செயல்கண்ட பின்னும்சகிப்பேன்—நம்பம்
உன்மக்கள் துயர்போக்க இன்னுமமறுப்பேன—கொழும்
நன்மக்கள் நலம்சேர்க்க இன்னும்வெறுப்பேன்—கடம்பா!
.....(வேல்.....)

— முருகு

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம்)

எதிர்க்கட்சி கூட்டு

முன்னணி செயலாளர்;

சு. க. கூட்டத்தில் ஆராயப்படும்

[கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலையொட்டி எதிர்கட்சிகளின் கூட்டு முன்னணிச் செயலாளராக ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டார நாயக்கா தர்மசிறிசேன நாயக்கா போன்றோர் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறப்படுகிறது.

இம்மாதம் 7ந் திகதிநடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டத்

(4ம் பக்கம் பார்க்க)

இலவச தையல் பயிற்சி வகுப்பு

(புலோலி)

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் இலவச தையல் பயிற்சி வகுப்பு நடாத்தப்படவுள்ளது. (61)

சித்திர கண்காட்சி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தினர் கோடமட்டத்திலான பரிசளிப்பு விழாவும் சித்திர ஓவியக்கண்காட்சியும் ஆகஸ்ட் மாதம் 28 ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடாத்தவுள்ளனர் (139)

பார்சிலோனா ஒலிம்பிக்

நாடுகள் பெற்ற பதக்கங்கள்

நாடு	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
இணைந்த சோவியத்	25	17	18
ஐக்கிய அமெரிக்கா	17	19	17
ஜெர்மனி	14	10	16
சீனா	9	15	6
ஹங்கேரி	9	7	2
அவுஸ்திரேலியா	6	8	6
தென்கொரியா	6	3	—
ஸ்பெயின்	4	1	1
யப்பான்	3	2	5
போலந்து	3	4	4
கியூபா	2	2	5
பிரான்ஸ்	4	4	11
இத்தாலி	4	4	7
துருக்கி	2	1	—
பிரிட்டன்	4	3	3
பல்கேரியா	1	4	1
ரூமேனியா	4	2	4
கனடா	5	1	5
நோர்வே	1	2	—
சுவீடன்	—	3	3
கிறீசு	1	—	—
நியூசிலாந்து	1	2	2
இஸ்ரேல்	—	1	1
நெதர்லாந்து	—	2	7
பெரு	—	1	—
செக்கோசிலவாக்கியா	2	2	1
யூகோஸ்லாவியா,	—	1	2
எஸ்தோனியா	1	—	—

பெல்ஜியம், பின்லாந்து, மங்கோலியா, சூரினாம், தலா ஒரு வெண்கலம்.

பார்ஸிலோனா ஒலிம்பிக்கில் பென் ஜோன்சன் தோல்வி

[பார்ஸிலோனா]

உலகில் அதிவேக ஓட்ட வீரர்களில ஒருவரான பென் ஜோன்சன் பார்ஸிலோனா ஒலிம்பிக்போட்டியில் தோல்வி அடைந்தார்.

ஆண்களுக்கான 100 மீற்றர் அரை இறுதிஓட்டத்திலேயே பென் ஜோன்சன் இம்முறை தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான மேற்படி இறுதிஓட்டத்தில் பிரிட்டனைச் சேர்ந்த 32 வயதான லிங்கா கிறிஸ்ரி 9.9-6 விநாடிகளில் ஓடி தங்கப்பதக்கத்தைப்பெற்றார். நமீபியா நாட்டு வீரர் 2வதுஇடத்தையும், அமெரிக்க வீரர் 3வது இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான 100 மீற்றர் இறுதிப்போட்டியில அமெரிக்காவைச் சேர்ந்த கே. டேவேக் முதலாவதாகவும், ஜமேக்கா நாடு 2வதாகவும், இணைந்த சோவியத்நாடு 3-வதாகவும் வந்தனர்.

இந்தியா தோல்வி

இதேநேரம் ஒலிம்பிக் ஹொக்கிப்போட்டிகளில் இந்தியா இதுவரை கலந்து கொண்ட நான்கு போட்டிகளில் மூன்றில் தோல்வியடைந்துள்ளது.

நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற ஹொக்கிப்போட்டியில் அவுஸ்திரேலியா 1-0 கோல்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் இதுவரை கலந்து கொண்ட நாலு போட்டிகளிலும் வெற்றி பெற்று முன்னணியில் நிற்கின்றது. [வி]

இருநாட்களில் 30 பேர் நாய்களினால் கடியுண்டனர்

[யாழ்ப்பாணம்]

கடந்த இருதினங்களில் யாழ்க்குடாப்பகுதியில் 30 பேர் நாய்களினால் கடியுண்டனர். 20 பேருக்கு மேற்பட்டோர் யாழ். வைத்தியசாலையில சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுவரும் இவ்வேளையில் நாய்கள் விசர் நோய்க்குள்ளாகி வருவதாகவும் இருதினங்களில் 10 க்கு மேற்பட்டோர் விசர்நாய்க்கடிக்குள்ளாகியும் உள்ளனர். [56]

மருத்துவ கல்லூரி விவகாரம் உதவி மருத்துவர்கள் அடையாள வேலைநிறுத்தம்

(சென்னை)

சென்னைக்கு அருகேயுள்ள சிறிராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி பிரச்னை தொடர்பாக தமிழகம் முழுவதும் இன்று அடையாள வேலை நிறுத்தத்தை உதவி மருத்துவர்கள் மேற்கொள்கிறார்கள்.

இந்தக் கல்லூரியை தனியாரிடம் கொடுக்காமல் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் மேற்படி கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது தெரிந்ததே.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழக அரசு எச்சரித்துள்ளது

லீவிலுள்ள அனைத்து மருத்துவர்களும் கடமைக்குத் திரும்பவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் (கே

நோயாளர் தொகை தினமும் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதத்திலிருந்து வெளிநோயாளர் பகுதி உட்பட மற்றும் சிகிச்சைப் பகுதிகளில் நோயாளர் தினமும் அதிகரித்துவருகின்றனர்.

கிளினிக்குகளில் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகின்றனர். காய்ச்சல், வயிற்றுவலி. மலேரியா, நெருப்புக்காய்ச்சல் ஆகியவற்றுக்கு ஆளாகிய நிலையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியில் சிகிக்சை பெறுவதற்காக வந்துகொண்டிருக்கின்றனர். ஜூலை மாதத்தில் வெளிநோயாளர் பிரிவில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஏனைய வைத்தியசாலைகளிலும் யூலை மாதத்திலிருந்து பல தரப்பட்ட நோயாளர்கள் அதிகமானோர் சிகிச்சை பெற்றுள்ளதாதாக சுகாதார பகுதி வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. 5[6]

மாதாந்த உதவிபணம்

(நெல்லியடி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், அரசினரின் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான, மார்ச், ஏப்ரல் ஆகியமாதங்களுக்கான பணம் கரவெட்டி உதவி அரச அதிபர் - அதிபர் பணிமனையிலும் மே யூன் ஆகிய மாதங்களுக்கான பணம் அவ்வப்பகுதி தபால் நிலையங்களினூடாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகியவற்றுக்கான உதவிப்பணமும் வழங்கப்பட்டு வருவதினால், ஆகஸ்ட் மாதம் 10ம் திகதிக்குள் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (160)

அதிக போட்டியாளர்கள் பங்கு பற்றிய ஒலிம்பிக்!

[பார்சிலோனா]

பார்சிலோனாவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 10 ஆயிரத்து 632 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதற்கு முன்னர் நடந்த ஒலிம்பிக் போட்டிகளிலும் பார்க்க இம்முறையே அதிக போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மொத்தமுள்ள போட்டியாளர்களில 7600 பேர் ஆண்கள், மிகுதி 3032 பேர் பெண்களாவர். அமெரிக்காவிலிருந்தே கூடுதலான வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். 607 பேர் அமெரிக்காவிலிருந்து கலந்து கொள்கிறார்கள் ஆனால் குறைந்த 2 விளையாட்டு வீரர்களே மொனாகோவுக்கே அனுப்பியுள்ளது.

12 சுதந்திர நாடுகள் இணைந்து பங்குபற்றும் சோவியத் இணைந்த கோஷ்டி. வருங்காலத்தில் தனித்தனியாகவே பங்குபற்றுமென இணைந்த அணியின் தலைவர் நிகோலாய் ரொக்கோவ் கூறினார்.

1 52ம் ஆண்டிலிருந்து சோவியத் ஒன்றியம், முதலாம் அல்லது 2ம் இடத்தையே வகித்து வந்துள்ளது. இனிமேல்வரும் 1996 ம் ஆண்டு அற்லான்ரா ஒலிம்பிக்கில் தனித்தனியே 12 நாடுகளும் பங்கு பற்றினால் முதலாம், இரண்டாம், மூன்றாமிடத்தை பிடிக்க பல காலம் எடுக்கும் என்றும் அவர் கூறினார். [கே]

தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழக கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தமிழ் மொழி கற்றல், கற்பித்தல் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில நடைபெறும்.

அண்மையில் உலகத் தமிழ் ஆசிரியர்கள் சார்பில் சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் பங்குபற்றிய பேராசிரியர் கா சிவத்தம்பி இக்கருத்தரங்கில், 'தமிழ் கற்றல், கற்பித்தலில் சில புதிய பரிமாணங்கள்' எனும் விடயம் பற்றித் தமது மனப் பதிவுகளை வெளிப்படுத்தவுள்ளார்.

வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை வடக்கு கிழக்கு உட்பட நாடு பூராகவும் நடைபெறுவதால் இருதரப்பினரும் பரீட்சை குழப்பமடையாமல் இருக்க இவ்வாறு ஒய்ந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாத இறுதிவரை இப் பரீட்சை நடைபெறுவதால், இந்த அமைதி மாத இறுதிவரை தொடரலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கே]

பரீட்சைகள்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமசேவை அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கான விசேட போட்டிப் பரீட்சை இம்மாதம் 28ம் திகதி நடைபெறவுள்ளது.

6ம ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை, இம்மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ளது நாடு பூராவும் 3 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (109)

சிறிலங்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கும், தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் இராமேஸ்வரம் இயந்திரப் படகு மீனவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (மா)

இன்று நல்லூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லை ஆதீன தொண்டர் படையினர் ஆலயப்பகுதி உட்புறத்தில் மக்களை ஒழுங்குபடுத்தியும் தொண்டினை ஆற்றவுள்ளனர்.

மாநகர சபையினர் குடிநீர் வசதியினையும் செய்துள்ளனர். மலசலகூட வசதியினை முன்பு போல் இம்முறையும் பழைய இடத்தில் அமைத்துள்ளனர். (56-157-சு)

எதிர்க்கட்சி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தில்லலித் அத்துலத்முதலியை எதிர்க் கட்சிகளின் கூட்டத் தணிச் செயலாளராக நியமிக்கும் யோசனை ஆராயப்படவிருக்கிறது. [மா]

13 கோடி ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துச் சுயதொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வீடற்றவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும், சேதமடைந்தசொத்துக்களைப் புனரமைத்தல், காயமடைந்தவர்களுக்கு நட்ட ஈடு வழங்குதல் போன்ற புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுள்ளதென்றும், மீளக் குடியமர்த்தலுக்கு 13கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. (சு)

தொடரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தைத் தொடர்வதிலே அரசு குறியாக இருந்துவருகிறது.

வடக்கில் பெரும் தாக்குதலை நடத்தும் நோக்குடன் பெரும் தயாரிப்பு வேலைகளில் அரசு ஈடுபட்டபோதும் அவை யாவும் தற்போது நிறுத்தப்படடுள்ளது.

யத்தம் இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்குமாக இருந்தால் இலங்கை பெரும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. [ரி]

வீரச் சாவு

(மட்டுநகர்)

கடந்த மாதம் 29-ம் திகதி மட்டு. இருதயபுரம் என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில்வீரவேங்கை செல்வராசா(சிவராசா பாலச்சந்திரன்- இருதயபுரம்) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [ரி]

பொம்மர் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள நொச்சிக்குளம், தவசியாகுளம் பகுதிகளில் நேற்று முன்தினம் பொம்மர் விமானங்களிலிருந்து பலத்த குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பொம்மர் விமானங்களோடு ஹெலி கொப்டரும் இணைந்து இப்பகுதியில் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. (ரி)

காரைநகர் மக்களுக்கு

(வட்டுக்கோட்டை)

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள், தற்போது தாம் தங்கியிருக்கும் இடங்களிலுள்ள கிராம சேவையாளரிடம் வீட்டு முகவரியையும், தங்கியிருப்போரின் பெயர்களையும் கொடுத்துப் பதிவுசெய்து கொள்ளவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் மக்களின் நன்மை கருதி, கிராம சேவையாளர்களினால் தயாரித்து அளிக்கப்படும் பட்டியல்களில் பெயர் இடம் பெற்றவர்களுக்கே இனிமேல் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளது. (139)

ஐரோப்பியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஒரு மாத காலத்துக்கு இந்த அகதிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளை சுவிஸ்சர்லாந்திலிருந்து திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக சுவிற்சர்லாந்திலுள்ள அகதிகளுக்கான தலைமையகத்தை சேர்ந்த மூன்று அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர்.

மேலும் இதைப் பின்பற்றி பல ஐரோப்பிய நாடுகள ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்றுலக நாடுகள் பல ஏற்கனவே குடிவரவு மற்றும் அரசியல் சட்டங்களைக் கடுமையாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி-ரி)

தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்கு தடடுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலில் பலத்த மழை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலய சுற்றாடலில் நேற்றிரவு திடீரென பலத்த மழை பெய்தது.

நேற்றிரவு 8-00 மணியளவில் நல்லூர் ஆலய சுற்றாடலில் மட்டும் மழை பெய்தது குறிப்பிடத்தது (75)

இந்தியாவிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாரத்தில் இருநாட்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானத்தில் அழைத்துவரப்படுவர்.

இந்த இருநாட்களிலும் ஒவ்வொருநாளும் நான்கு விமானங்களில் அகதிகள் வந்து இறங்குவர்

இதேவேளை இம்மாதம் 10-ம் திகதி 5000 அகதிகள் கப்பல் மூலம் மன்னாருக்கு அழைத்து வரப்படவுள்ளனர் (ரி)

யு என். எச். சி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் தெரியாது.

ஆனால் யு. என். எச். சி. ஆர். அகதிகள் பலவந்தமாக திருப்பியனுப்பப்படுகிறார்களா என்பதனை விசாரிக்க வேண்டிய நிலையிலுள்ளது

இந்த விசாரணைகள் எந்த இடத்தில் வைத்து மேற்கொள்வது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படவில்லை. (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 65ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8